Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.73/2023

**P.W**.1

| | |
|---|---|
| Name | : **திருமதி.ஜெரினா** |
| Father/Husband Name | : திரு, வேலுகுமார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2026

**குறுக்கு விசாரணை –**

என்னுடைய புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் சீட்டு தொழில் நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சீட்டு தொழில் செய்வதற்கு முறைப்படி அரசிடம் அனுமதி வாங்கி உரிமம் பெறவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நான் உரிமம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். புகாரில் நான் 01.11.2021 அன்று எதிரிக்கும் அவருடன் 3 உறவினர்கள் அனைவருக்கும் ஏலச்சீட்டு 5 லட்சம் மற்றும் 3 லட்சம் எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சீட்டு குறித்தான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த ஏலத்தொகையை எதிரி மற்றும்

அவரது உறவினர்கள் செலுத்திவிட்டார்களா என்றால் செலுத்தவில்லை. 5 லட்சம் ரூபாக்கான ஏலச்சீட்டை எதிரி எடுத்தார். 3 லட்சம் ரூபாய்கான ஏலச்சீட்டை எதிரி தான் எடுத்தார். ஆனால் என்னுடைய புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் 5 லட்சம் ரூபாக்கான ஏல சீட்டை மட்டும் தான் எதிரி எடுத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பணம் கொடுக்கும் போது நான் செக் மற்றும் புரோநோட் ஆகியவற்றை வாங்கிக் கொண்டு தான் பணம் கொடுப்பேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடமிருந்து பூர்த்தி செய்யப்படாத 5 காசோலைகளை வாங்கினேன் என்றால் சரியல்ல. சீட்டு போட்டு பணத்தை எடுப்பதற்காக பணத்தை கொடுக்கும் போது செக்கியுரிட்டியாக காசோலைகள் வாங்கிக் கொண்டு தான் பணம் கொடுப்பேன் என்றால் சரியல்ல. பணம் கட்டாத பட்சத்தில் அவர்கள் கொடுத்த காசோலையை பயன்படுத்தி நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்வதற்காக நான் காசோலைகள் வாங்கிக் கொள்வேன் என்றால் சரியல்ல. 23.05.2022 அன்று எதிரி என்னிடம் 8 லட்சம் பணம் கேட்டார் என்று என்னுடைய புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த பணத்தை என்னுடைய தங்க நகைகளை அடகு வைத்தும், மீதமுள்ள 6 லட்சம் ரூபாயை கலைவாணி என்பவரிடமிருந்து பெற்றுக் கொடுத்ததாகவும் என்னுடைய புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் ஏற்கனவே வாங்கிய கடனான 8 லட்சம் ரூபாய் திருப்பிக் கொடுப்பாத போது நான் மீண்டும் 8 லட்சம் ரூபாய் அவருக்கு கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அந்த தேதியில் எதிரி எனக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை எதிரி 2021ம் வருடம்

சீட்டு எடுக்கும் போது எனக்கு கொடுத்த காசோலை என்றால் சரியல்ல. எதிரி ஏல சீட்டு கொடுப்பதற்காக எனக்கு கொடுத்த 5 காசோலைகளை பயன்படுத்தி இந்த நீதிமன்றத்தில் என்னுடைய அத்தை நூர்ஜகான், என்னுடைய சித்தி மகள் சைனஸ்பேகம், எனக்கு வேண்டப்பட்டவரான முகமதுபாரூக், என்னுடைய சித்தி மகனின் மனைவியான சுனிதா ஆகியோர்களை வைத்து 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.7 ஆவணம் செங்கல்பட்டு கூட்டுறவு சங்கத்தில் நகைகளை அடமானம் வைத்ததற்கான ரசீதை வைத்து அந்த அடமான பணத்தை எதிரிக்கு கொடுத்ததாக எந்த ஒரு ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2021ம் வருடம் கொடுக்கப்பட்ட காசோலைகளை வைத்து வழக்கிற்கு ஏதுவாக பின்னிட்டு தயாரிக்கப்பட்ட பு.சா.ஆ.7 ஆவணம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 23.05.2022 அன்று பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் நான் எதிரியிடமிருந்து புரோநோட் அல்லது காசோலை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். முன்பின் தெரியாத நபர்களுக்கு 8 லட்சம் ரூபாய் ஒரே சமயத்தில் முழு தொகையாக கொடுப்பதற்கு சாத்தியம் இல்லை என்றாலும், நான் எதிரிக்கு அந்த தேதியில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பணம் கொடுத்தால் ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்றும் DD மூலம் பணம் கொடுக்கப்படவேண்டும் என்று சட்டம் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது. கலைவாணி என்பவரும் ஏல சீட்டு தொழில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அவரும் இந்த நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரியும், கலைவாணி மற்றும் நானும் நண்பர்கள் தான். நானும், கலைவாணியும் ஒன்று சேர்ந்து எதிரிக்கு

எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்து ஒருவருக்கொருவர் உதவி செய்துக் கொள்கிறோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பு.சா.ஆ.4 ஆவணமான எதிரிக்கு கொடுத்த அறிவிப்பில் நான் புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளது போல் சீட்டு போட்டு 8 லட்சம் ரூபாய் எதிரி எடுத்தார் என்கிற விவரத்தையும் அவர் பணத்தை திரும்ப செலுத்த வில்லை என்கிற விவரத்தையும் சட்ட அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கலைவாணி என்பவரிடமிருந்து 6 லட்சம் ரூபாய் வாங்கி எதிரிக்கு கொடுத்ததாக சட்ட அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.4 ஆவணமும் புகார் மற்றும் பிரமாண வாக்குமூலம் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது என்றால் சரியல்ல. எதிரி 2021ம் வருடம் எடுத்த ஏல தொகையான 6 லட்சம் ரூபாயை 5 லட்சம் மற்றும் 1 லட்சம் ரூபாய் Gpay மூலம் பல பரிவர்த்தனையாக திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எதிரியின் உறவினர் ஏல தொகையில் செலுத்த வேண்டிய 3 லட்சம் ரூபாயை செலுத்தாமல் இருந்ததால் எங்களுக்குள் தகராறு ஏற்பட்டு பழிவாங்கவேண்டும் என்பதற்காக அந்த காசோலைகளை வைத்து எதிரி என்னிடம் புதிதாக கடன் வாங்கியதாக பொய்யாக ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு செலுத்தவேண்டிய நிலுவை தொகை எதுவும் இல்லை என்றாலும், எதிரி பெற்ற அனைத்து கடனையும் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் சரியல்ல. எனக்கும் காவல் துறையினருக்கும் நல்ல பழக்க வழக்கம் இருப்பதால் அதை பயன்படுத்தி எதிரியின் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.11 மற்றும் பு.சா.ஆ.12 ஆவணங்கள் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி போலிசார் எதிரியை மிரட்டி எழுதி வாங்கிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. அந்த இரண்டு ஆவணங்களும்

ஏற்கத்தக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. பு.சா.ஆ9 ஆவணம் நானாக தயார் செய்த ஆவணம் என்றாலும் அதில் உள்ள தொகைகள் நானாக நிரப்பியது என்றாலும் எனவே, இந்த ஆவணம் ஏற்க்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் நான் எதிரிக்கு 6 லட்சம் ரூபாய் கடனாக கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரியை பழிவாங்கவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியுடைய நண்பர் அவர் வாங்கிய 3 லட்சம் ரூபாய் கடனை திருப்ப செலுத்தாததால் அவரை பழிவாங்க எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கிற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்பதால் அந்த ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.